நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – மேற்பிரிவு

## Level : Intermediate - Upper

*November 2009*

வினாக்கள் : 55

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

உங்கள் பதில்களைத் தரப்பட்ட வினாத்தாளில் குறியிடுக.

பின்வரும் பந்தியை வாசித்து 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## பேராசிரியர் C. J. எலியேசர் (Prof C. J. Eliezer)

கணிதவியலை உருவாக்கிய ஆய்வறிவாளர்களின் மத்தியில் ஓர் உன்னதமான இடத்தை பெறுபவர் பேராசிரியர் எலியேசர். வடமராட்சியில் அல்வாய் என்ற கிராமத்தில் 1918ம் ஆண்டு ஆனி மாதம் 12ம் திகதி எலியேசர் பிறந்தார்.

எபிரேய (the Hebrew name of "Eliezer" means God's help) மொழியில் எலியேசர் என்பதன் பொருள் கடவுளின் துணை என்பதாகும். உலக மக்களுக்கு சேவை புரிய கடவுள் அவரை அனுப்பி வைத்ததாக பெற்றோர் அவருக்கு இப்பெயரை இட்டனர். கணித விஞ்ஞான மானி கற்கை நெறியை கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்று முதலாம் வகுப்பில் சித்தி பெற்று, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அணுசக்தியின் புதிய உற்பத்தி வடிவங்களின் கண்டுபிடிப்புக்கான நோபால் பரிசு பெற்ற பேராசிரியர் டைராக் (Dirac) என்பவரின் வழிகாட்டலின் கீழ் தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டார்.

கணிதமும் பௌதிகவியலும் பேராசிரியர் எலியேசரின் இரு கண்களாக எப்பொழுதும் விளங்கியது. 1949ம் ஆண்டு லண்டன் பல்கலைக் கழகம் D.Sc என்ற பட்டத்தை வழங்கி இவரை கௌரவித்தது. சார்ல்ஸ் எல்.மேயர் (Charles L. Mayer) விருதும் எலியேசயருக்கு வழங்கப்பட்டது.

தனது 31 வயதிலே கணிதவியல் பேராசிரியராக நியமனம் பெற்றார். இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதனாலும் பல்கலைக்கழக போதனா மொழி தொடர்பாக ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் காரணமாகவும் இலங்கையை விட்டு மலேசியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் 1959ம் ஆண்டு கணிதவியல் பேராசிரியராக நியமனம் பெற்று தனது கணிதவியல் ஆய்வை தொடர்ந்தார்.

இவர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து பெரும் பணி ஆற்றியவர். அவுஸ்திரேலியாவில் முதன் முதலில் தமிழ்ப் பாடப் போதனையை ஆரம்பித்தவரும் இவரே. இவருக்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் AO(Order of Australia) என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

### மிகப்பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.

1. பேராசிரியர் எலியேசர் எந்த கிராமத்தில் பிறந்தார்?

   (a) அல்வாய்
   (b) உடுப்பிட்டி
   (c) மானிப்பாய்
   (d) கந்தரோடை

2. பேராசிரியர் எலியேசர் எந்த ஆண்டில் பிறந்தார்?

(a) 1918
(b) 1819
(c) 1900
(d) 1800

3. அணுசக்தியின் புதிய உற்பத்தி வடிவங்களின் கண்டுபிடிப்புக்கான நோபால் பரிசைப் பெற்றவர் யார்?
(a) பேராசிரியர் எலியேசர்
(b) பேராசிரியர் டைராக்
(c) பேராசிரியர் ராமனுஜம்
(d) பேராசிரியர் லக்கிராண்ட்

4. பேராசிரியர் எலியேசர் எந்த பல்கலைக்கழகத்தில் படித்து கலாநிதி பட்டம் பெற்றார்?
(a) கேம்பிரிட்ஜ் (Cambridge)
(b) லண்டன் (London)
(C) சிட்னி (Sydney)
(d) மெல்பொன் (Melbourne)

5. பேராசிரியர் எலியேசர் எந்தத் துறையில் சிறந்து விளங்கினார்?
(a) கணிதம்
(b) பௌதீகவியல்
(c) கணிதமும் பௌதீகவியலும்
(d) பொறியியல்

6. எந்த ஆண்டு பேராசிரியர் எலியேசர் D.Sc என்ற பட்டத்தைப் பெற்றார்?
(a) 1918
(b) 1959
(c) 1949
(d) 1955

7. எந்த நிறுவனத்தின் ஆரம்பகால உறுப்பினராக பேராசிரியர் எலியேசர் முன்னணியில் நின்று உழைத்தவர்?
(a) உலகத் தமிழ் ஆராய்ச்சி
(b) அணுசக்தி
(c) பொறியியல்
(d) விவசாயம்

8. எந்த வயதில் எலியேசர் கணிதவியல் பேராசிரியராக நியமனம் பெற்றார்?
(a) 31
(b) 45
(c) 13
(d) 54

9. இலங்கையை விட்டு பேராசிரியர் எலியேசர் வெளியேறக் காரணமாக இருந்தவை?
(a) தனிச் சிங்கள சட்டம்
(b) பல்கலைக்கழக போதனா மொழி
(c) தனிச்சிங்கள சட்டமும் பல்கலைக்கழக போதனா மொழியும்
(d) ஒரு காரணமும் இல்லை

10. அவுஸ்ரேலியாவின் பல்கலைக் கழகங்களின் போதனா மொழி எது?
    (a) ஆங்கிலம்
    (b) தமிழ்
    (c) சிங்களம்
    (d) சமஸ்கிருதம்

**வினாக்கள் 11 - 14 : பின்வரும் இரட்டைக் கிளவிகளைப் பொருத்தமான இடங்களில் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| **(a)** (பளீர் பளீர்) | **(b)** (நற நற) |
| **(c)** (மட மட) | **(d)** (கல கல) |

11. இடும்பனைப் பார்த்த வீமன் தனது பல்லை ________________________ என்று கடித்தான்.

12. இடியுடன் மழை பெய்த போது மின்னல் __________________________ என்று மின்னியது.

13. அப்பனின் குறும்புக் கதையைக் கேட்ட குஞ்சு __________________________________ என சிரித்தாள்.

14. தாகத்தினால் தவித்த பசு தண்ணீரை ______________________________ என்று குடித்தது.

**வினாக்கள் 15 - 19 : இடைச்சொற்களை சரியாகப் பயன்படுத்தி வாக்கியங்களை நிறைவு செய்க.**

| | |
|---|---|
| **(a)** இருப்பினும் | **(b)** ஆனால் |
| **(c)** ஏனென்றால் | **(d)** எனவே |

15. இருவரும் ஒரே பாடசாலையில் பணி புரிகின்றனர். ________________ இருவரும் இருவேறு கருத்துக்களுடன் வெவ்வேறு உலகங்களாக மாறிப் போய்க் கொண்டு இருந்தனர்.

16. நான் வீடு போய்ச் சேரும்வரை அப்பா எதுவும் எனக்குச் சொல்லவில்லை. _____________ பின்னர் விபரமாக அம்மா எனக்கு எல்லாவற்றையும் சொன்னார்.

17. விடுதி யன்னல்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து இறுகப் பூட்டினோம். ____________ எங்களுக்கு கள்வர் பற்றிப் பயமாக இருந்தது.

18. ஆசிரியத் தொழில் எனக்கு மிகவும் புதியது. _________________ எனக்கு அனுபவமுள்ள ஆசிரியர்களின் உதவி ஆரம்பத்தில் தேவையாக இருந்தது.

19. ரூபி இன்று பாடசாலைக்கு வரவில்லை. _________________ அவளுக்கு இன்று வயிற்று வலி.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 20 - 24 : சொற்றொடர்களுக்கு ஏற்ற ஒரு சொல்லைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| **(a)** யாழ்ப்பாணம் | **(b)** சங்கிலியன் |
| **(c)** நல்லூர் | **(d)** முல்லைத்தீவு |

20. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி தமிழ் மன்னனின் பெயர் ________________________ .

21. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகரமாக விளங்கிய விளங்கிய நகரம் __________ .

22. நான்காம் உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம் ______________________ .

23. நந்திக்கடல் என அழைக்கப்படும் கடற்பகுதி எங்கே இருக்கின்றது? ________________ .

24. பண்டாரவன்னியன் என்ற தமிழ் மன்னன் எந்த இடத்தில் இருந்து ஒல்லாந்தர்களைத் துரத்தினான்? __________________________ .

**வினாக்கள் 25 - 29 : சொற்றொடர்களுக்கு ஏற்ற ஒரு சொல்லைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| **(a)** பாடகர் | **(b)** பொறியியலாளர் |
| **(c)** அதிபர் | **(d)** நடிகர் |

25. பாடசாலையைக் கொண்டு வழி நடத்துபவர் ___________________.

26. “Principal” என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ்ப் பதம் என்ன? _________________.

27. கட்டிடங்களை வரைபடம் வரைந்து திட்டம் தீட்டி கட்டி முடிப்பவர் ___________________.

28. சினிமாப் படங்களில் நடிப்பவர் ___________________.

29. கவிதைகளைப் பாடுபவர் ___________________.

**வினாக்கள் 30 - 33 : கோடிட்ட சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லை வைத்து பின்வரும் வாக்கியங்களை பூர்த்தி செய்க.**

| | |
|---|---|
| **(a)** சிறிய | **(c)** காயை |
| **(b)** நண்பர்கள் | **(d)** புதிய |

30. <u>பழைய</u> வீட்டிற்கு சாமான்களைக் கொண்டு போகவேண்டும்.

31. நீண்ட நாள் <u>விரோதிகள்</u> பின்னர் ________________ ஆக மாறிய கதைகள் எப்பொழுதும் சுவாரசியமாக இருக்கும்.

32. <u>பழத்தை</u> உண்ட அப்பனும் குஞ்சுவும் ________________ கண்டதும் அதனை எடுத்து தூர எறிந்தார்கள்.

33. <u>பெரிய</u> யானைக்கு ________________ கண்கள் இருப்பது ஆச்சரியமாக இருந்தது.

**வினாக்கள் 34 - 37: கோடிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை வைத்து பின்வரும் வாக்கியங்களை பூர்த்தி செய்க.**

| | |
|---|---|
| **(a)** திண்ணை | **(c)** தழுவியதாக |
| **(b)** மட்டும் | **(d)** தொல்காப்பியம் |

34. ஒரு பாடசாலையின் வளர்ச்சி வெறுமனே கட்டிடங்களின் வளர்ச்சியில் ________________ தங்கியிருப்பதில்லை.

35. தொன்மையும் சிறப்பும் மிக்க தமிழ் மொழியின் அரும் பெரும் பொக்கிஷங்களுள் ஒன்றாக ________________________ விளங்குகின்றது.

36. தமிழ்நாட்டில் ஆரம்ப காலப் பள்ளிக் கூடங்கள் ____________________________ பள்ளிக்கூடங்களாகவே இயங்கின.

37. வடகிழக்கு இலங்கையின் பொருளாதாரம் நீண்ட காலமாக அரசசேவை, விவசாயம், மீன்பிடி, பனைசார் குடிசைத் தொழில் ஆகியவற்றைத் ________________________ இருந்து வந்தது.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 38 - 41 : பின்வரும் பழமொழிகளுக்கு ஏற்ற விளக்கத்தை தெரிவு செய்க.**

| |
|---|
| **விளக்கம்**:<br><br>(a) கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக் கூடாது.<br>(b) நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்.<br>(c) எந்தச் செயலிலும் ஊக்கத்துடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.<br>(d) கனக்க கதைகப்பவரில் எவ்வித பிரயோசனமும் இல்லை. |

38. நிறைகுடம் தளம்பாது. குறைகுடம் தளம்பும்.

39. எண் எழுத்து இகழேல்.

40. முயற்சி திருவினையாக்கும்.

41. அறம் செய்ய விரும்பு.

**வினாக்கள் 42-48: பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

42. யாழ் நூலைத் தந்து உதவிய இலங்கைப் பேரறிஞர் யார்?
    (a) விபுலானந்தர்
    (b) சோமசுந்தரப் புலவர்
    (c) ஆறுமுகநாவலர்
    (d) பேராசிரியர் கணபதிப்பிள்ளை

43. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தொடர் எந்த தமிழ் நூலில் வருகின்றது?
    (a) சிலப்பதிகாரம்
    (b) புறநானூறு
    (c) தொல்காப்பியம்
    (d) ஆத்திசூடி

44. “Liberation” என்ற ஆங்கில சொல்லின் தமிழ்ச் சொல் எது?
    (a) விடுதலை
    (b) கணணி
    (c) ஆச்சரியம்
    (d) ஓட்டம்

45. நள மகராசன் தமயந்தியிடம் தூதனுப்பிய பறவை எது?
    (a) அன்னம்
    (b) கிளி
    (c) புறா
    (d) கொக்கு.

46. முல்லைக் கொடிக்கு இரங்கி தன் தேரை வழங்கிய தமிழ் மன்னனின் பெயர் என்ன?
    (a) பாரி
    (b) சேரன் செங்குட்டுவன்
    (c) சங்கிலியன்
    (d) மனுநீதிகண்ட சோழன்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

47. வயலும் வயல் சார்ந்த இடத்தை தமிழர்கள் எப்படி அழைக்கின்றனர்?
(a) குறிஞ்சி
(b) மருதம்
(c) பாலை
(d) நெய்தல்.

48. முத்தமிழ் என யாம் எதைக் குறிப்பிடுகின்றோம்?
(a) நாடகம், நடனம், பாட்டு
(b) இயல், இசை, நாடகம்
(c) பாட்டு, இசை, நடனம்
(d) இசை, நடனம், நாடகம்.

**வினாக்கள் 49 - 55 : தமிழர் வரலாறும் இலக்கியமும் - பின்வரும் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள சொற்களை பயன்படுத்தி விடைத்தாளில் விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| கரிகாலன் | இணையத்தளம் | கணினி |
| கணிதம் | ராஜ ராஜ சோழன் | சேர சோழ பாண்டியர் |
| வட-கிழக்கு மாகாணங்கள் | விஞ்ஞானம் | சேரன் செங்குட்டுவன் |
| சரி | தென்-மேற்கு மாகாணங்கள் | பிழை |

49. தமிழில் மூவேந்தர் என அழைக்கப்பட்டவர்கள் யார்?

50. காவேரி நதிக்கு குறுக்கே அணை கட்டிய சோழமன்னனின் பெயர் என்ன?

51. கங்கை ஆற்றை கடந்து, இமயத்தை வெற்றி கொண்ட தமிழ் அரசனின் பெயர் என்ன?

52. கலாநிதி இராமனுஜம் எந்தத் துறையில் உலகப்புகழ் பெற்று விளங்கினார்?

53. தமிழ் பாரம்பரியப் பிரதேசம் என இலங்கையில் உரிமை கொண்டாடப்படும் மாகாணங்கள் எவை?

54. “Website” என்ற ஆங்கில சொல்லை தமிழில் எப்படி அழைப்போம்?

55. சோழநாட்டு அரசர்கள் சீனாவுடன் வர்த்தக வாணிப உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். இக் கூற்று சரியானதா?

இதுவே இறுதிப் பக்கம்.